Australian Government
Department of Agriculture, Water and the Environment

# தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் சட்டம் (Product Emissions Standards Act) 2017-ன்கீழ் விதிவிலக்குக்கான வழிகாட்டி



© காமன்வெல்த் ஆஃப் ஆஸ்திரேலியா 2020

**அறிவுசார் சொத்துரிமைகளின் உரிமைத்துவம்**
வேறு வகையில் குறிப்பிடப்பட்டாலன்றி, இந்த வெளியீட்டில் உள்ள நகலுரிமை (மற்றும் வேறு எந்த அறிவுசார் சொத்துரிமைகளும்) காமன்வெல்த் ஆஃப் ஆஸ்திரேலியாவிற்கு (காமன்வெல்த் எனக் குறிப்பிடப்படுகிறது) உரியது.

**கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமம்**
மூன்றாம் தரப்பினால் கொடுக்கப்பட்ட உள்ளடக்கம், லோகோக்கள் மற்றும் காமன்வெல்த் கோட் ஆஃப் ஆர்ம்ஸ் தவிர்த்து இந்த வெளியீட்டில் உள்ள அனைத்துப் பொருள்களும் கிரியேட்டிவ் காமன்ஸ் ஆட்ரிபியூஷன் 4.0 சர்வதேச உரிமத்தின்கீழ் உரிமம் கொடுக்கப்பட்டது.

உரிமம் பற்றிய விசாரணைகளுக்கும், இந்த ஆவணத்தைப் பயன்படுத்துவதற்கும் copyright@awe.gov.au-க்கு மின்னஞ்சல் செய்ய வேண்டும்.

தரவைப் பட்டியலிடுதல்
இந்த வெளியீடு (மற்றும் அதிலிருந்து தயாரிக்கப்பட்ட எந்த ஒரு வெளியீடும்) கீழ்க்காண்பது போன்று குறிப்பிடப்பட வேண்டும்: விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை 2020, தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் சட்டம் (Product Emissions Standards Act) 2017-ன்கீழ் விதிவிலக்குக்கான வழிகாட்டி, கான்பரா, மார்ச். CC BY 4.0.

ISBN 978-1-76003-288-3

இந்த வெளியீடு **http://www.environment.gov.au/protection/publications/pes-guide-to-exemptions**-ல் கிடைக்கும்

விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை
GPO பாக்ஸ் 858 கான்பரா ACT 2601
தொலைபேசி 1800 803 772
வலைதளம் awe.gov.au

விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை வழியாகச் செயல்படும் ஆஸ்திரேலிய அரசு இந்த வெளியீட்டில் உள்ள தகவல்களையும் தரவையும் தயாரிப்பதிலும் ஒருங்கிணைப்பதிலும் போதுமான கவனம் செலுத்தியிருக்கிறது. எனினும், விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை , அதன் ஊழியர்கள் மற்றும் ஆலோசகர்கள் கவனமின்மைக்கான கடப்பாடு, மற்றும் எந்த ஒரு இழப்பு, சேதம், காயம், செலவு அல்லது எந்த இந்த வெளியீட்டில் உள்ள எந்த ஒரு தகவலையும் அல்லது தரவையும் பார்த்து, பயன்படுத்தி அல்லது நம்பிய காரணத்தினால் எந்த ஒரு நபருக்கும் ஏற்பட்ட செலவு உட்பட்ட அனைத்துக் கடப்பாடுகளிலும் சட்டத்தால் அனுமதிக்கப்படும் அளவுக்கு உரிமையைத்  துறக்கிறார்கள்.

# உள்ளடக்கம்


**1. அறிமுகம்** **1**

**2. ஒரு விண்ணப்பத்தைத் தயாரித்தல்** **2**

விதிவிலக்கு வகைகள் 3
விண்ணப்பதாரரிடமிருந்து தேவைப்படும் தகவல்கள் 4
விண்ணப்பக் கட்டணங்கள் 5
விண்ணப்பக் கட்டணத்தை தளர்த்துவதற்கான கோரிக்கை 5
திருப்பிச் செலுத்துதல் 5
விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் 6
ஒரு விண்ணப்பத்தை மதிப்பிடுவதற்கான கால அளவு 6

**3. ஒரு விதிவிலக்கு அளிக்கப்பட்டால்** **7**

நிபந்தனைகள் 7
ஒரு விதிவிலக்கை அல்லது அதன் நிபந்தனைகளை வேறுபடுத்துதல், இடைநிறுத்துதல் அல்லது ரத்து செய்தல் 7

**4. ஒரு விதிவிலக்கு அளிக்கப்படாவிட்டால்** **9**

ஒரு முடிவின்மீது மேல்முறையீடு 9

**5. துறையின் பங்கு** **10**

**6. கூடுதல் தகவல்** **11**



# 1. அறிமுகம்

1 ஜூலை 2018 முதல், ஆஸ்திரேலியாவுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட, அல்லது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மற்றும் ஆஸ்திரேலியாவில் வழங்கப்பட்ட 19 கிலோவாட் அல்லது குறைவான மின்சக்திகொண்ட அனைத்து புதிய ஸ்பார்க் இக்னிஷன் சாலையில் ஓடாத எந்திரங்கள் மற்றும் புதிய ஸ்பார்க்-இக்னிஷன் உந்த கடல்சார் எந்திரங்கள் தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் சட்டம் *(Product Emissions Standards Act) 2017*-ன்கீழ் குறிப்பிடப்பட்ட தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்களுக்குக் கட்டுப்பட்டவையாக இருக்க வேண்டும். உள்நாட்டுத் தயாரிப்பு என்பது தயாரிப்புகளுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட எந்திரங்களின் அசெம்பிளியை உள்ளடக்காது.

1 ஜூலை 2020 முதல் ஆஸ்திரேலிய சந்தைக்கு வழங்கப்பட்ட அனைத்துத் தயாரிப்புகளும் இந்தச் சட்டத்திற்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

குறிப்பிட்ட சூழ்நிலைகளில், ஆஸ்திரேலியாவுக்குள் இறக்குமதி செய்யப்பட அல்லது விற்கப்பட புகை உமிழ்வுச் செந்தரங்களைப் பூர்த்தி செய்யாத தயாரிப்புளை அனுமதிக்க விதிவிலக்குகள் கொடுக்கப்படலாம். அச்சூழல்கள், குறிப்பிட்ட தொழில் தேவைகள் தொடர்பான சூழல்கள் மற்றும் ஒரு சான்றளிக்கப்பட்ட தயாரிப்பைப் பயன்படுத்த முடியாத சிறப்புச் சூழல்களில் பயன்படுத்த படுவதாகவும் இருக்கலாம்.

ஒரு விதிவிலக்கின்கீழ் ஒப்பீட்டளவில் மிகக் குறைவான எந்திரங்களே ஆஸ்திரேலியாவிற்குள் இறக்குமதி செய்யப்படும் அல்லது வழங்கப்படும் எனவும், புகை உமிழ்வு குறைவாகவே இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

விதிவிலக்கு அளிக்கப்படும்போது, விதிவிலக்கு வைத்திருப்பவருக்கு ஒரு தனித்த அடையாள எண் வழங்கப்படுகிறது. தயாரிப்புகள் இறக்குமதி செய்யப்படும்போது இந்த எண் வழங்கப்பட வேண்டும்.


ஆஸ்திரேலிய சான்றளிப்புக்காக விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறைக்கு விதிவிலக்குக்கான ஒரு விண்ணப்பம் செய்யக் கருதும் யாருக்கும் இந்த வழிகாட்டி தகவல்களை வழங்குகிறது. சட்டத்தின்கீழ் ஆஸ்திரேலிய சான்றளிப்பு விண்ணப்பங்களுக்காக ஒரு தனியான வழிகாட்டி உள்ளது.

# 2. ஒரு விண்ணப்பத்தைத் தயாரித்தல்


ஒரு விதிவிலக்குக்கு விண்ணப்பிக்கும் முறையை தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் விதிகள் (Product Emissions Standards Act) 2017-ன் பிரிவு 29 தெளிவுபடுத்துகிறது.

விதிவிலக்கு என்பது ஒரு குறிப்பிட்ட கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வுத் தயாரிப்பு சார்ந்ததாக இருக்கலாம் அல்லது ஒரு விண்ணப்பதாரரை அல்லது ஒரு குறிப்பிட்ட தயாரிப்பு சார்ந்த விண்ணப்பதாரர் உட்பட்ட குறிப்பிட்ட வகை நபர்களைக் குறிப்பிடுவதாக இருக்கலாம். இறக்குமதி, வழங்கல், குறிக்கும் தேவைகள் அல்லது பதிவேடு பராமரிப்பு தேவைகள் பற்றிய சட்டத்தின் பகுதிகள் 3 அல்லது 4-ல் கொடுக்கப்பட்ட விதிகள் சார்ந்ததாக விதிவிலக்கு இருக்கலாம்.

துறையின் ஆன்லைன் சர்விசஸ் பிளாட்ஃபார்ம் வழியாக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.




ஆன்லைன் சேவையைப் பெற அனைத்து விண்ணப்பதாரர்களும் பதிவு செய்ய வேண்டும். நடப்பு பயனர்கள் தங்களுடைய மின்னஞ்சல் முகவரி மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி புகுபதிவு செய்யலாம். புகு பதிவு செய்ததும், 'ஒரு கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வு தயாரிப்புக்கான சான்றளிப்பு அல்லது விதிவிலக்குக்கு விண்ணப்பித்தல்' ('Apply for an Emissions Controlled Product certification or exemption') என்பதை கிளிக் செய்யுங்கள்.



## விதிவிலக்கு வகைகள்

ஆறு விதிவிலக்கு வகைகளை விதிகளின் பிரிவு 30 குறிப்பிடுகிறது. இந்த வகைப்பாடுகளுக்கு பல்வேறு ஆதரவுத் தகவல்கள் தேவை. ஒவ்வொரு விதிவிலக்கு விண்ணப்பமும் ஒரே ஒரு விதிவிலக்கு வகைகளுக்குள் மட்டுமே கொடுக்கப்பட வேண்டும்.

| விதிவிலக்கு வகைகள் (விதிகள் மேற்கோள்)[1] | விவரம் |
|---|---|
| ஏற்றுமதி (30(1)(a)) | தயாரிப்புகள்.ஆஸ்திரேலியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஆனால், அவை ஆஸ்திரேலியாவில் பயன்படுத்துவது இல்லை. |
| பரிசோதனை மதிப்பீடும் காட்சிப்படுத்தலும் (30(1)(b)) | தயாரிப்புகள் சோதிக்கப்படும், மதிப்பீடு செய்யப்படும், காட்சிப்படுத்தப்படும், விளம்பரம் செய்யப்படும் அல்லது வழங்கப்படுவதற்கு வழங்கப்படும் அல்லது முன்கூட்டியே அனுப்பாணையிடப்படும், ஆனால் தயாரிப்புகளுக்குச் சான்றளிப்பதற்கு முன்னர் ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படாது அல்லது வழங்கப்படாது. |
| தேசியப் பாதுகாப்பு (30(1)(c)) | தயாரிப்புகள் தேசிய பாதுகாப்பு நோக்கங்களுக்காக ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படையினால் அல்லது பாதுகாப்பு முகமையினால் பயன்படுத்தப்படும் |
| அவசர சேவைகள் (30(1)(d)) | அவசரகால சேவைகள் செய்யும் நிறுவனத்தினால் தயாரிப்புகள் பயன்படுத்தப்படும். |
| போட்டி (30(1)(e)) | ஏற்பாடு செய்யப்பட்ட போட்டியில் தயாரிப்புகள் பயன்படுத்தப்படும். |
| பதிலீட்டு எந்திரங்கள் (30(1)(f)) | சான்றளிக்கப்படாத, பழுதுபார்க்க முடியாத எந்திரங்களுக்கான பதிலீட்டு எந்திரங்கள். |

### மறு ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்பட்ட தயாரிப்புகள் (ஆஸ்திரேலியாவில் விற்கப்படவோ பயன்படுத்தப்படவோ கூடாது)

ஆஸ்திரேலியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும், ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தாத சான்றளிக்கப்படாத தயாரிப்புகளை இறக்குமதி செய்வதற்கு இந்த விதிவிலக்கு வகை கிடைக்கும். இந்த வகையின்கீழ் விதிவிலக்கு அளிக்கப்பட்ட தயாரிப்புகள், அவை ஆஸ்திரேலியாவில் இருக்கும்போது உள்நாட்டில் விற்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்த தயாரிப்புகள் எப்படி நிர்வகிக்கப்படுகின்றன என்பது உட்பட்ட விதிவிலக்கு நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். கூடுதலாக, தயாரிப்புகள் ஏற்றுமதி செய்யப்பட்டதும் துறையிடம் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

### சோதனை செய்யப்பட்ட, மதிப்பிடப்பட்ட, காட்சிப்படுத்தப்பட்ட, விளம்பரப்படுத்தப்பட்ட, வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்ட, அல்லது முன்பே அனுப்பாணையிடப்பட்ட தயாரிப்புகள்

இன்னும் சான்றளிக்கப்படாத, ஆனால், இறுதியாக சான்றைப் பெறும் என எதிர்பார்க்கப்படும் தயாரிப்புகளைச் சோதனை செய்ய, மதிப்பிட, காட்சிப்படுத்த மற்றும் விளம்பரப்படுத்த இந்த விதிவிலக்குக் வகை தயாரிப்பாளர்களுக்கு அல்லது வழங்குநர்ளுக்கு கிடைக்கும். முன்பே அனுப்பாணையிடப்பட்ட பொருள் சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் கொள்முதல் செய்பவருக்கு இறக்குமதி செய்யப்பட்ட அல்லது வழங்கியபோது சான்றளிக்கப்படாத ஆனால் காட்சிப்படுத்தப்பட்ட அல்லது விளம்பரப்படுத்தப்பட்ட எந்திரங்களின் அடிப்படையில் ஒரு முன் அனுப்பாணை அளிக்க ஒரு நபருக்கு இது அனுமதிக்கிறது.

1 பல்வேறு விதிவிலக்கு வகைகளுக்கு (தேசிய பாதுகாப்பு, அவசரகால சேவைகள், ஏற்பாடு செய்யப்பட்ட போட்டி மற்றும் மாற்று எந்திரங்கள்), நியமிக்கப்பட்ட வகைக்கான வரைகூறுகளை விண்ணப்பதாரர் பூர்த்தி செய்ய வேண்டும். மேலும், அதற்குப் பதிலாகப் புகை உமிழ்வுச் செந்தரங்களுக்குக் கட்டுப்பட்ட பிற தயாரிப்புகள் கிடைக்கவில்லை என்பதையும் நிரூபிக்க வேண்டும்.

### ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படையினால் அல்லது சட்ட அமலாக்க அல்லது பாதுகாப்பு முகமையினால் பயன்படுத்தப்படும் தயாரிப்புகள்

ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படை, சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அல்லது பாதுகாப்பு முகமைகள் ஆகிய அமைப்புகளினால் மட்டுமே தேசியப் பாதுகாப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் சான்றளிக்கப்படாத தயாரிப்புகளுக்கு இந்த விதிவிலக்கு வகை கிடைக்கும். ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அல்லது பாதுகாப்பு முகமை என்பது இன்டிபெண்டென்ட் நேஷனல் செக்கியூரிட் லெஜிஸ்லேஷன் மானிட்டர் சட்டம் (Independent National Security Legislation Monitor Act) 2010-ல் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த முகமைகளினால் அன்றாட பாதுகாப்புச் சாராத நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் தயாரிப்புகளுக்கு இந்த விதிவிலக்கு கிடைக்காது.

### அவசரகால சேவைகள் செய்யும் நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் தயாரிப்புகள்

மீட்பு அல்லது அவசரகால நோக்கங்களுக்காக அவசரகால சேவைகளை அளிக்கும் நிறுவனத்தினால் மட்டுமே பயன்படுத்தப்படும் சான்றளிக்கப்படாத தயாரிப்புகளுக்கு இந்த விதிவிலக்கு வகை கிடைக்கும். அந்த நோக்கங்களுக்காக பயிற்சியளிப்பதையும் இது உள்ளடக்கும். அன்றாட அவசரமற்ற அல்லது மீட்பு சாராத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் தயாரிப்புகளுக்கு இந்த விதிவிலக்கு கிடைக்காது. அவசர சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் என்பது ஒரு காவல்துறை அல்லது சேவை, ஒரு தீயணைப்புப் பணி, ஒரு அவசர ஊர்தி சேவை, கடற்கரைக் காவலாளர் சேவை, மீட்புச் சேவை, அல்லது அலைச்சறுக்கு உயிர் பாதுகாப்பு நிறுவனம் உட்பட்டவை என விதிகள் (துணைப்பிரிவு 30(4)) வரையறுக்கின்றன.

### ஏற்பாடு செய்யப்பட்ட போட்டியில் பயன்படுத்தப்படும் தயாரிப்புகள்

ஏற்பாடு செய்யப்பட்ட போட்டியில் மட்டும் பயன்படுத்தப்படும் சான்றளிக்கப்படாத தயாரிப்புகளுக்கு இந்த விதிவிலக்கு வகை கிடைக்கும். சட்டப்பூர்வமான பந்தயப் போட்டி நடவடிக்கைகளை விதிகள் தடுக்காமல் இருப்பதை இது உறுதி செய்கிறது. ஏற்பாடு செய்யப்பட்ட போட்டி என்பது, கட்டுப்படுத்தப்பட்ட அல்லது உரிமம் வழங்கப்பட்ட உறுப்பினர்களைக்கொண்ட நிறுவனத்தினால் நடத்தப்படும் மற்றும் வெளியிடப்பட்ட போட்டி விதிகளின்படி இருக்கும் ஒரு பந்தயம் அல்லது ஒரு பந்தயத் தொடரை உள்ளடக்கும் என விதிகள் (உட்பிரிவு 30(5)) வரையறுக்கிறது. இந்த வரையறையில் மீன்பிடித்தல் போட்டிகள் அடங்காது.

### பதிலீட்டு எந்திரங்கள்

ஏற்கனவே உள்ள சான்றளிக்கப்படாத, பழுதுபார்த்துப் பயன்படுத்த முடியாத எந்திரங்களை மாற்றிவிட்டு புதிய எந்திரங்களைப் பயன்படுத்துவதற்கான சான்றளிக்கப்படாத தயாரிப்புகளுக்கு மட்டும் இந்த விதிவிலக்கு வகை கிடைக்கும். உயர் மதிப்புள்ள சாதனத்தில் அந்த சாதனம் இன்னும் செயல்படக்கூடியதாகவும், எந்திரம் மட்டுமே குறைபாடு உடையதாக அல்லது பழுதுபார்க்க முடியாததாக ஆகிவிட்ட ஒரு சான்றளிக்கப்படாத எந்திரத்தை அது போன்றே ('like for like') உள்ள பதிலீட்டு எந்திரத்தை இந்த விதிவிலக்கு அனுமதிக்கிறது. 1 ஜூலை 2020 அன்று, ஆஸ்திரேலிய சந்தைக்கு வழங்கப்படும் எல்லாத் தயாரிப்புகளும் முறைப்படுத்தப்பட்ட விதிகளின் படி உமிழ்வுச் செந்தரங்களினால் சான்றளிக்கப்பட வேண்டும். எனவே, இந்த நாளுக்கு முன்னர் வழங்கப்பட்ட அந்த அசல் எந்திரங்கள் மட்டுமே இந்த வகைக்குள் ஒரு விதிவிலக்குக்குத் தகுதி பெறும்.

## விண்ணப்பதாரரிடமிருந்து தேவைப்படும் தகவல்கள்

ஒரு விதிவிலக்குக்கான ஒரு விண்ணப்பம் எழுத்துப்பூர்வமானதாக இருக்க வேண்டும், கீழ்க்காணும் தகவல்கள் இடம்பெற வேண்டும்.

- விண்ணப்பதாரரின் பெயரும் தொடர்பு விவரங்களும்
- விண்ணப்பிக்கப்படும் ஒற்றை விதிவிலக்கு வகை

- தயாரிப்பு அல்லது தயாரிப்புகளின் விவரங்கள்
  - விதிவிலக்கின் கீழ் தயாரிப்பு அல்லது தயாரிப்புகள் இறக்குமதி செய்யப்பட அல்லது வழங்கப்பட எதிர்பார்க்கப்படும் தேதி அல்லது காலம்
  - விதிவிலக்கின்கீழ் இறக்குமதி செய்யப்பட அல்லது வழங்கப்பட எதிர்பார்க்கப்படும் தயாரிப்புகளின் எண்ணிக்கை
  - ஆஸ்திரேலியாவில் அந்தத் தயாரிப்பு அல்லது தயாரிப்புகள் எப்படிப் பயன்படுத்தப்படும் அல்லது கையாளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்பது பற்றிய ஒரு விவரிப்பு
- ஆதரவான ஆவணங்கள் (இணக்கமான மாற்றுகள் இல்லாததற்கான சான்றும் இதில் அடங்கும்)
- கொடுக்கப்பட்ட தகவல்கள் சரியானவை என்பதற்கான ஒரு உறுதிமொழி.

தொடர்பு நபரிடமிருந்து துறை கூடுதல் தகவல்களைக் கோரலாம்.

## விண்ணப்பக் கட்டணங்கள்

ஒரு விதிவிலக்கு விண்ணப்பத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன, அவை கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

சரியான கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் மட்டுமே அல்லது விண்ணப்பதாரர் துறையிடமிருந்து கட்டணத் தளர்த்தலுக்குக் கோரிக்கை விடுத்து பெற்றிருந்தால் மட்டுமே துறை ஒரு விண்ணப்பத்தை மதிப்பிடத் தொடங்கும்.

| விதிவிலக்கு வகைகள் | ஒரு விண்ணப்பத்துக்கான கட்டணம்* |
|---|---|
| ஆஸ்திரேலியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஆனால், ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தாத தயாரிப்புகள். | $1,470 |
| சோதனை செய்யப்பட்ட, மதிப்பிடப்பட்ட, காட்சிப்படுத்தப்பட்ட, விளம்பரப்படுத்தப்பட்ட, வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்ட, அல்லது முன்பு அனுப்பாணை வழங்கப்பட்ட தயாரிப்புகள் | $390 |
| ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படையினால் அல்லது சட்ட அமலாக்க அல்லது பாதுகாப்பு முகமையினால் பயன்படுத்தப்படும் தயாரிப்புகள் | $550 |
| அவசரகால சேவைகள் செய்யும் நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் தயாரிப்புகள் | $1,470 |
| ஏற்பாடு செய்யப்பட்ட போட்டியில் பயன்படுத்தப்படும் தயாரிப்புகள் | $1,470 |
| பதிலீட்டு எந்திரங்கள் | $1,470 |

*விண்ணப்பக் கட்டணங்களுக்கு GST பொருந்தாது.

## விண்ணப்பக் கட்டணத்தை தளர்த்துவதற்கான கோரிக்கை

விதிகளின் பிரிவு 44-ன்கீழ், விண்ணப்பதாரர் கோரினால், நிதி கஷ்டம் போன்ற விதிவிலக்கான சூழல்கள் இருப்பது பற்றி திருப்தியடைந்தால் ஒரு விண்ணப்பக் கட்டணத்தை துறை தளர்த்தலாம். விதிவிலக்கு விண்ணப்பத்தின் ஒரு அங்கமாக துறையின் இணையச் சேவை வலைத்தள முகவரி வழியாகக் கட்டண தளர்வுக்காகக் கோரலாம். அனைத்துக் கோரிக்கைகளையும் துறை பரிசீலித்து தன்னுடைய முடிவை எழுத்து வடிவில் விண்ணப்பதாரருக்குக் கொடுக்கும்.

## திருப்பிச் செலுத்துதல்

கட்டணத்தைச் செலுத்திய 14 நாட்களுக்குள் விண்ணப்பம் திரும்பப் பெறப்பட்டால், மற்றும் விண்ணப்பத்தை துறை மதிப்பிடத் தொடங்காவிட்டால் மட்டுமே விண்ணப்பக் கட்டணத்தைத் திருப்பியளிப்பதற்குத் தகுதி பெறுவார்கள். துறை விண்ணப்பத்தை மதிப்பீடு செய்யத் தொடங்கிவிட்டால், அல்லது விதிவிலக்கு மதிப்பீடு செய்யப்பட்டு ஆனால் கொடுக்கப்படாதிருந்தால், கட்டணம் திருப்பியளிக்கப்படாது.

பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கைகளை எழுத்து வடிவில் அனுப்ப வேண்டிய துறையின் முகவரி productemissions@awe.gov.au

## விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்

ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதும், தொடர்பு நபரின் மின்னஞ்சலுக்கு அதை உறுதிப்படுத்தும் மின்னஞ்சல் அனுப்பப்படும். ஆன்லைன் சேவைகளில் லாகின் செய்து எந்த நேரத்திலும் தங்களுடைய விண்ணப்பத்தின் நிலையை விண்ணப்பதாரர்கள் சரிபார்த்துக் கொள்ளலாம்.

சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை திருத்த இயலாது. ஒரு தவறான தகவலை உள்ளிட்டதாக அல்லது விண்ணப்பத்துடன் தொடர்புடைய விவரங்கள் மாறிவிட்டதாக அல்லது தவறி விட்டதாக ஒரு விண்ணப்பதாரர் அறிந்தால், மாற்றப்பட வேண்டிய தகவலை எழுத்துப்பூர்வமாக துறையிடம் வழங்கலாம். அறிவிப்புகளை productemissions@awe.gov.au-க்கு அனுப்ப வேண்டும். துறை அந்த விண்ணப்பத்தை மேம்படுத்தி அதை எடுத்துக்கொள்ளுவதற்கு முன்னர் விண்ணப்பதாரரிடமிருந்து அந்த மாற்றங்களுக்கு முறைப்படி ஒப்பளிக்கும்படி கேட்கப்படுவார்கள்.

productemissions@awe.gov.au-க்கு எழுதி துறையிடம் தெரிவிப்பதன் மூலம் மதிப்பீட்டின்போது எந்த நேரத்திலும் விண்ணப்பங்களை திரும்ப பெற முடியும். மேலே குறிப்பிட்டுள்ளதுபோன்று கட்டணத்தைச் செலுத்திய 14 நாட்களுக்குள் விண்ணப்பம் திரும்பப் பெறப்பட்டால், மற்றும் விண்ணப்பத்தை துறை மதிப்பிடத் தொடங்காவிட்டால் மட்டுமே விண்ணப்பக் கட்டணம் திருப்பியளிக்கப்படும்.

## ஒரு விண்ணப்பத்தை மதிப்பிடுவதற்கான கால அளவு

கட்டணம் செலுத்தியதை உறுதிசெய்தல் அல்லது கட்டண தளர்வு ஏற்பை உறுதிப்படுத்துதல் உட்பட தேவையான எல்லாத் தகவல்களையும் துறை பெற்று 60 நாட்களுக்குள் விதிவிலக்கு அளிக்கப்படாவிட்டால் அல்லது மறுக்கப்படாதிருந்தால், அந்த விண்ணப்பம் மறுக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும் என்று விதிகளின் பிரிவு 33 கூறுகிறது. பெரும்பான்மையான விண்ணப்பங்கள் 60 நாட்களுக்கும் மிக முன்னரே இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# 3. ஒரு விதிவிலக்கு அளிக்கப்பட்டால்

நியமன விதிவிலக்கு வகைக்கான நிபந்தனைகளை ஒரு விண்ணப்பம் பூர்த்தி செய்வதாக துறை திருப்தியடைந்தால், ஒரு விதிவிலக்கு அளிக்கப்படும். அதுபற்றி துறை விண்ணப்பதாரருக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கும், துறையின் வலைதளத்தில் விதிவிலக்கு அறிவிப்பு வெளியிடப்படும். அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நாளன்று அந்த விதிவிலக்கு நடைமுறைக்கு வரும்.

## நிபந்தனைகள்

எல்லா விதிவிலக்குகளும் விதிகளின் பிரிவு 34-ன்கீழ் சேர்க்கப்பட்ட நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டதாக இருக்கும்.

- விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட உரிய வகையின்படி விதிவிலக்களிக்கப்பட்ட தயாரிப்பு அல்லது தயாரிப்புகள் பயன்படுத்தப்படுவதை அல்லது கையாளப்படுவதை இறக்குமதியாளர் அல்லது வழங்குநர் நியாயமாக எதிர்பார்க்க வேண்டும்.
- விதிவிலக்கின் ஒரு நகல், அல்லது துறையின் வலைதளத்தில் விதிவிலக்கைப் பார்க்கலாம் என்பது பற்றிய தகவல் பொருளுடன் சேர்த்து இருக்க வேண்டும்.

விதிவிலக்கில் கூடுதல் நிபந்தனைகளை துறை சேர்க்கலாம். விதிவிலக்களிக்கப்பட்ட தயாரிப்புகளின் அதிகபட்ச எண்ணிக்கை, விதிவிலக்குக் காலம், விதிவிலக்களிக்கப்பட்ட தயாரிப்புகளின் வழங்கல் மற்றும் பயன்பாட்டின்மீது உள்ள வரம்புகள் ஆகியவை கூடுதல் நிபந்தனைகளுக்கான உதாரணங்களில் அடங்கும்.

விதிவிலக்கு நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டிருப்பதை உறுதிப்படுத்த துறை கண்காணிக்கும், நடைமுறைப்படுத்தும். விதிவிலக்கின் ஒரு நிபந்தனை மீறப்பட்டால், அந்த விதிவிலக்கு அதன் பிறகு பொருந்தாது. சான்றளிக்கப்படாத தயாரிப்புகளை இறக்குமதி செய்தது மற்றும் வழங்கல் தொடர்பான குற்றம் உட்பட சட்டத்தின் முழு தேவைகளுக்கும் அந்த தயாரிப்பு அல்லது நபர் உட்பட்டவராக இருப்பார்.

## ஒரு விதிவிலக்கை அல்லது அதன் நிபந்தனைகளை வேறுபடுத்துதல், இடைநிறுத்துதல் அல்லது ரத்து செய்தல்

சில சூழல்களில் ஒரு விதிவிலக்கினை துறை வேறுபடுத்தலாம், இடைநிறுத்தலாம் அல்லது ரத்து செய்யலாம்.

விதிகளின் பிரிவு 35 ஒரு விதிவிலக்கினை மாறுபடுத்த துறைக்கு அனுமதியளிக்கிறது. ஒரு கூடுதல் நிபந்தனையைச் சேர்க்க, அல்லது திருத்த அல்லது ஏற்கனவே உள்ள நிபந்தனையை அகற்ற துறையின் வலைதளத்தில் அறிவிப்பை வெளியிடுவதன் மூலம் மாறுபாடுகள் செய்யப்படுகின்றன. விதிவிலக்குக்காகத் தொடர்புகொள்ள வேண்டிய நபருக்கு விவரங்கள் எழுத்து வடிவில் தெரிவிக்கப்படும். அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நாளன்று விதிவிலக்குக்கான அந்த மாறுபாடு நடைமுறைக்கு வரும். துறை ஒரு விதிவிலக்கில் எங்கு மாறுபடலாம் என்பதற்கான ஒரு உதாரணம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பதிலீட்டு எந்திர வகையின்கீழ் டிசம்பர் 2020-வரை ஒரு சான்றளிக்கப்படாத எந்திரத்துக்கு ஒரு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. ஒரு பொருத்தமான மாற்று பதிலீட்டு எந்திரம் கிடைப்பதோடு, ஆஸ்திரேலிய தரநிலையின்கீழ் ஆகஸ்ட் 2020-ல் சான்றும் பெற்றுள்ளது. கூடுதலாக எந்த ஒரு சான்றளிக்கப்படாத பதிலீட்டு எந்திரங்களும் இறக்குமதி செய்யப்படாத வகையில், ஆனால், டிசம்பர் 2020-வரை விதிவிலக்கின்கீழ் ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட எந்திரங்களை தொடர்ந்து வழங்க அனுமதிக்கும் வகையில் துறை அந்த விதிவிலக்கில் மாறுபடலாம்.

வலைதளத்தில் ஒரு அறிவிக்கையை வெளியிடுவதன் மூலம் விதிவிலக்கினை இடைநிறுத்த விதிகளின் பிரிவு 36 துறைக்கு அனுமதியளிக்கிறது. விதிவிலக்குக்காகத் தொடர்புகொள்ள வேண்டிய நபருக்கு விவரங்கள் எழுத்து வடிவில் தெரிவிக்கப்படும். விதிவிலக்கின் நிபந்தனைகள் கடைபிடிக்கப்படவில்லை என்று ஒரு நியாயமான சந்தேகம் துறைக்கு ஏற்பட்டால், ஒரு விதிவிலக்கு பகுதியளவிலோ அல்லது முழுமையாகவோ இடைநிறுத்தப்படலாம். ஒரு விதிவிலக்கின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டிருக்கிறதா என்பதை துறை விசாரிக்க நேரத்தைக் கொடுக்க விதிவிலக்கை இடைநிறுத்துவது உதவுகிறது.

அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நாளன்று அந்த இடைநிறுத்தம் நடைமுறைக்கு வரும். துறையின் வலைதளத்தில் இரண்டாவது அறிவிக்கையை வெளியிடுவதன் மூலம் ஒரு இடைநிறுத்தம் முடிக்கப்படும். இரண்டாவது அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நாளிலிருந்து இது நடைமுறைக்கு வரும். ஒரு இடைநிறுத்தம் நடைமுறையில் இருக்கும்போது, விதிவிலக்குக்குட்பட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். ஒரு விதிவிலக்குக்கு உட்பட்ட பொருட்கள் சான்றளிக்கப்பட்டாலன்றி அவற்றை இறக்குமதி செய்வதும் சப்ளை செய்வதும் சட்டத்தின் பகுதி 3 (தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்களை நடைமுறைப்படுத்துதல்) அல்லது பகுதி 4 (பதிவேடு பராமரிப்பு)-ன்கீழ் ஒரு குற்றமாகும்.

வலைதளத்தில் ஒரு அறிவிக்கையை வெளியிடுவதன் மூலம் விதிவிலக்கினை திரும்பப்பெற விதிகளின் பிரிவு 37 துறைக்கு அனுமதியளிக்கிறது. ஒரு விதிவிலக்கினைத் திரும்பப் பெற, குறிப்பிடப்பட்ட விதிவிலக்கு வகையின்படி பயன்படுத்தப்படாது அல்லது கையாளப்படாது என்று அல்லது விதிவிலக்கின் நிபந்தனைகள் பின்பற்றப்படவில்லை என்று நியாயமாக திருப்தியடைய வேண்டும்.

# 4. ஒரு விதிவிலக்கு அளிக்கப்படாவிட்டால்

நியமன விதிவிலக்கு வகைக்கான நிபந்தனைகளை ஒரு விண்ணப்பம் பூர்த்தி செய்வதாக துறை திருப்தியடையா விட்டால், ஒரு விதிவிலக்கு மறுக்கப்படும். அதுபற்றி துறை விண்ணப்பதாரருக்கு எழுத்து வடிவில் தெரிவிக்கும்.

## ஒரு முடிவின்மீது மேல்முறையீடு

துறையின் முடிவிற்கு இணங்காத நபர்கள் நிர்வாக மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (Administrative Appeals Tribunal) *சீராய்வைக்* கோரலாம். விதிவிலக்கு விண்ணப்பங்கள் தொடர்பான கீழ்க்காணும் முடிவுகள் நிர்வாக மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தினால் (Administrative Appeals Tribunal) *சீராய்வு* செய்யப்படலாம்:

- ஒரு கட்டண தளர்வு கோரிக்கையை மறுக்கும் ஒரு முடிவு
- ஒரு விதிவிலக்கை அளிக்க நிராகரிப்பதற்கான ஒரு முடிவு
- ஒரு விதிவிலக்கில் ஒரு நிபந்தனையைக் குறிப்பிடுவதற்கான ஒரு முடிவு
- ஒரு விதிவிலக்கில் வேறுபடுத்துதல், இடைநிறுத்துதல், இடைநிறுத்தலை முடிக்காதிருப்பது அல்லது திரும்பப் பெறுதலுக்கான ஒரு முடிவு.

கூடுதல் தகவல்களை http://www.aat.gov.au-ல் பார்க்கலாம்.

# 5. துறையின் பங்கு

சட்டத்தையும், சட்டத்தின்கீழ் உள்ள எந்த ஒரு தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்களையும் துறை நிர்வகிக்கிறது. சட்டத்தின் பிரிவு 11 விதிவிலக்குகளை அளிப்பதற்கு விதிகளை ஏற்படுத்த அமைச்சரை அனுமதிக்கிறது. சட்டத்தின்கீழ் தயாரிப்புகள் மற்றும் / அல்லது நபர்களுக்கான விதிவிலக்கினை துறை அளிக்கும் சூழல்களை விதிகளின் பகுதி 5 தெளிவுபடுத்துகிறது.

பின்வருவனவற்றிற்குத் துறை பொறுப்பு:

- விண்ணப்பதாரர்கள் அல்லது சாத்தியமான விண்ணப்பதாரர்களிடமிருந்து வரும் விசாரணைகளுக்குப் பதிலளித்தல்
- விண்ணப்பதாரரினால் சரியான கட்டணம் செலுத்தியுள்ளதை உறுதிசெய்தல்
- ஒவ்வொரு விண்ணப்பத்திலும் எல்லாத் தேவையான தகவல்களும் உள்ளனவா எனச் சரி பார்த்தல்
- ஒரு விதிவிலக்கினை வழங்க வேண்டுமா அதற்கு எந்த ஒரு நிபந்தனைகளையும் கொடுக்க வேண்டுமா என மதிப்பிடலும் தீர்மானித்தலும்
- விண்ணப்பதாரருக்கு அவருடைய விண்ணப்பத்தின் முன்னேற்றம்  பற்றித் தெரிவித்தல்
- விதிவிலக்கு அளிக்கப்படும்போது, விதிவிலக்குக்கான ஒரு தனித்த அடையாள எண்ணும் சில நிபந்தனைகளும் வழங்கப்படுகின்றன. துறையின் வலைதளத்தில் அந்த விதிவிலக்கு பற்றிய ஒரு அறிவிப்பு வெளியிடப்படுகிறது
- விதிவிலக்கு நிராகரிக்கப்பட்டால், அதுபற்றியும் அதற்கான காரணங்களையும் விண்ணப்பதாரருக்குத் தெரிவிப்பது
- சட்டத்திற்கும் விதிவிலக்கு நிபந்தனைகளுக்கும் இணங்கி நடப்பதை உறுதிசெய்தல்

# 6. கூடுதல் தகவல்

தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் பற்றி அல்லது ஒரு விதிவிலக்குக்கு விண்ணப்பிப்பது எப்படி என்பது பற்றி உங்களுக்கு ஏதும் கேள்விகள் இருந்தால், துறையைத் தொடர்பு கொள்ளுங்கள்:

- மின்னஞ்சல் productemissions@awe.gov.au
- தொலைபேசி 1800 803 772

ENV310.0420